**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 59/2022**

**வாதி தரப்பு சாட்சி–2 ஆனந்தகுமார் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 18.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1) எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக வசிக்கிறேன் என்றால் பிறந்தது முதல் அங்குதான் வசிக்கிறேன். எனது முகவரியை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி என்ன முகவரியில் குடியிருக்கிறார் என்றால் குளித்தலை வட்டம், மருதூர் கிராமத்தில் வசிக்கிறார். நான் வசிக்கும் இடத்தில் இருந்து வாதி இருககும் இடம் எவ்வளவு துூரம் என்றால் சுமார் 20 கிமீ துூரம் இருக்கும். எனது மாவட்டம் வேறு, வாதி வசிக்கும் மாவட்டம் வேறு என்றால் சரிதான். வாதியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் சுமார் 30 வருடங்களாக தெரியும். வாதி எனக்கு தாய்மாமா.

2) எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், 1993 ம் வருடம் சிவக்குமாரிடம் இருந்து வாதியின் தகப்பனார் மாசி நிலத்தை ரூ.20,000/– கொடுத்து குத்தகைக்கு எடுத்தார். மாசி இறந்த பின்னிட்டு வாதி மேற்படி இடத்தை குத்தகைக்கு ஓட்டிவந்து, பின்னிட்டு 2010 ல் ரூ.8,250/– கொடுத்து மேற்படி குத்தகையை புதுப்பித்துக் கொண்டார். வாதி எனது தாய்மாமா என்பதையும், அவரது தகப்பனார் மாசி எனது தாத்தா என்பதையும் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் 1984 ல் பிறந்தேன். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட தேதியில் எனக்கு என்ன வயது என்றால் சுமார் 9 வயது இருக்கும். வா.சா.ஆ.1 ஏற்பட்டது குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றும், வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொல்லியுள்ள நிபந்தனைகளின் படி பிரதிவாதி, வாதிக்கு பணத்தை திருப்பிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

3) பிரதிவாதி சிவக்குமாரை தெரியுமா என்றால் தெரியாது. பால்ராஜ், சந்தனம், சுந்தரமூர்த்தி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். சுந்தரமூர்த்தி என்பவர் யார் என்றால் பார்த்திருக்கிறேன், சரியாக தெரியவில்லை. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், தாவா சொத்தை அனுபவித்து வருகிறார். அது தனக்கே கிடைக்க வேண்டும் என்பதற்காக வழக்கு போட்டுள்ளார். இவ்வழக்கின் விபரங்கள் வாதி சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். எனது சாட்சிய வாக்குமூலம் எங்கு தயார் செய்யப்பட்டு, கையெழுத்து செய்யப்பட்டது என்றால் நீதிமன்றத்தில் வைத்துதான் கையெழுத்து செய்தோம். எனக்கு இவ்வழக்கின் விபரம் எதுவும் தெரியாது என்றும், வாதி எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தனது அனுபவத்தை நிரூபிக்க ஏதாவது ஆவணம் தாக்கல் செய்திருக்கிறாரா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

4) நான் சொல்வது போல வாதி தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றும், பிரதிவாதியின் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. குத்தகைக்காக ஆவணம் ஏற்படுத்தப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மாசிக்கு எத்தனை குழந்தைகள் என்றால், 3 ஆண்கள், 3 பெண்கள். ஆண்வாரிசுகளில் வாதி எத்தனையாவது நபர் என்றால் 2 வது நபர். 3 வது மகன் உயிரோடு இருக்கிறாரா என்றால் இல்லை. வாதி இந்து சமய முறைப்படி தனது தகப்பனாரின் இறுதி சடங்கை செய்தார் என்றும், அதக்றாக வா.சா.ஆ.1 ஆவணத்தை அவரிடம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. மாசி வா.சா.ஆ.1 ஆவணத்தை எப்போதும் வாதியிடம் கொடுக்கவில்லை என்றும்,

எதேச்சையாக கிடைத்த ஆவணத்தை வைத்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

5) குத்தகை சட்டம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ஒப்பந்த சட்டம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். பால்ராஜை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 12 வருடங்களாக தெரியும். அவர் வாதியுடன் வருவார். சந்தனம் எத்தனை வருடமாக தெரியும் என்றால், அவ்வளவாக எனக்கு பழக்கமில்லை. சுந்தரமூர்த்தியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் அவரை தெரியாது. தாவா சொத்து எவ்வகையை சேர்ந்தது என்றால் நஞ்சை நிலம் ஆகும். நான் வாதிக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி சொன்னதன் அடிப்படையில் தான் ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றும், எனவே ஆவணங்கள் பற்றி நான் செல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**